**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –600 006**

**ந.க.எண். 39620 /டபிள்யு.1/இ1/2023 , நாள் .08.2023**

பொருள் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி - 01.01.2023 இல் உள்ளவாறு அரசு / நகராட்சி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள்/முதுகலை மொழி ஆசிரியர்கள்/உடற்கல்வி இயக்குநர் (நிலை–1) /அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் - தேர்ந்தோர் பட்டியல் - தயார் செய்ய கருத்துருக்கள் பெறப்பட்டு உத்தேச பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது - பெறப்பட்டமை - திருத்தம், நீக்கம், சேர்க்கை மற்றும் கோரிக்கைகள் – இறுதி பெயர் பட்டியல் வெளியிடுதல் - சார்பு.

பார்வை

1. W.P.NO.17632/2022 etc., தொகுப்பு வழக்குகளில் நீதிமன்ற தீர்ப்பாணை நாள். 29.08.2022.
2. W.P.(MD).NO.867/2023 வழக்கில் நீதிமன்ற தீர்ப்பாணை நாள். 12.01.2023.
3. உச்சநீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண். CONTEMPET PETITION (CIVIL) Diary No(s). 6415/2021 in SLP (C).NO. 2886/2016 இடைக்கால தீர்ப்பாணை நாள். 18.04.2023.
4. சென்னை–06, ஆசிரியர் தேர்வு வாரியம், செயலாளரின் செயல்முறைகள் ந.க.எண்.e.Office 4965141/E1/S1/2022 நாள்.03.07.2023
5. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 39620/டபிள்யு1/இ1/2023, நாள். 05.07.2023, 11.07.2023 மற்றும் 24.07.2023
6. முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

01.01.2023 அன்றைய நிலவரப்படி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்த அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் உத்தேச பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, அப்பட்டியலில் இடம்பெற்ற முதுகலை ஆசிரியர்கள், அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் தெரிந்துக்கொள்ளும் வகையில் பார்வை(5)ல் காணும் 24.07.2023 நாளிட்ட

செயல்முறைகளின்படி அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் மின்அஞ்சல் (E-Mail) வழியாக அனுப்பப்பட்டு, உரிய காலக்கெடு அளிக்கப்பட்டு, திருத்தம்/நீக்கம்/சேர்க்கை விவரங்கள் கோரப்பட்டது.

பார்வை (6)ல் காணும் கடிதங்களின்படி அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக பெறப்பட்ட திருத்தம், சேர்க்கை, நீக்கம் சார்ந்த விவரங்களின்படியும், இதர கோரிக்கைகளின் அடிப்படையிலும், இறுதி பெயர் பட்டியல் இத்துடன் இணைத்து (இப்பட்டியலில் இடம்பெற்ற ஆசிரியர்கள் தெரிந்துக்கொள்ளும் வகையில்) அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் மின்அஞ்சல் (E-Mail) வழியாக அனுப்பப்படுகிறது. அனைத்து முதுகலை ஆசிரியர்கள் / அரசு உயர் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் கையொப்பம் பெற்று கோப்பில் வைக்க அறிவுறுத்தப்படுகிறது. இதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் மறு அஞ்சலில் அனுப்பிட அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:-** இறுதி பெயர் பட்டியல்

(1. அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசியர் - 1)

(2. முதுகலை ஆசிரியர் - 1)

ஒம்/- (க.அறிவொளி)
பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

1.அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் வழியாக)

2.அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்